உ

சித்தக்களபக் கணபதிதுணை.

மானிட
சுகாதாரக்கடல்.

இஃது

கும்பகோணம் தாலூகா செம்பகமல்லி

ஸ்ரீமான்

அப்பாவுசெட்டியார் சுவீகார குமாரன்

முத்தொழில் வைத்தியம்

அ. சீனிவாச செட்டியாரால்

எழுதிய சஞ்சிகை

கும்பகோணம் ஆரியன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1921 ௵

உ

கணபதி துணை.

மானிட சுகாதாரக்கடல்.

1. வைத்தியமும் தற்காலமும்

வைத்தியம் செய்ய பிரியமில்லாதவர்கள் எவரேனுமுண்டோ இல்லையென்றே சொல்லவேண்டும் தற்காலம் எவ்வருணத்தாரும் வைத்தியம் செய்யலாமல்லவா? இன்னதொழில் உயர்வு தாழ்வு நல்லது கெட்டதென்பதை சீர்தூக்கிப்பார்த்து நடப்பவர்கள் அரிது அப்படிப்பார்த்தவர்களுக்கு வைத்தியத் தொழில் மேலானதென்று காணப்படும். அப்படிப் பாராமல் இயற்கைத்தொழில் சேர்க்கைத்தொழில் மலிந்த தொழில்கள் முதலியதுகளை மனம்போனவழியேநாடிப்போவதினால் அடையும் பலன் ஒன்றுமில்லை கல்வி, அறிவு, நல்லொழுக்கம், எண்ணித்துணிகை, மனத்திடம், விடாமுயற்சி இவைகளால் உண்டாகும் நன்மையை அளவிடமுடியாது. எந்த விஷயத்திற்கும் மனந்தான்காரணம் மனதையொருவழிப்படுத்தினவர்களுக்கு சர்வசித்தியும் உண்டாகிறது.

2. தேசீய வைத்திய நிலைமை

சர்வ வல்லமையுள்ள சித்தர்களால் கூறிய சாஸ்திரப் பிரமாணப்படி மானிடர்களுக்கு ஏற்படும் 4448 வியாதி பெயர் குணம், அசாத்தியரோக லெக்ஷணவிதிகள் கூறியபடி நம்தேசீய ஜனங்களுக்கு வியாதிகள் ஏற்படுவதால் அவைகளுக்கு சித்தர்களால் கூறிய சாஸ்திரப்படி காலம், தேசம், தேகம், வயது, வியாதி, அளவு, காரணம் முதலியவற்றிற்குத் தக்கவாறு சிகிச்சை செய்யவேண்டி 32-வகையால் அமைக்கக்கூடிய அனேக ஔஷத முதலியவைகளால் மேற்சொல்லியவைகளுக்குத்தக்கவாறு சுருதி யுக்தி அனுபவப்படி சமயோசிதமாய் மெய்யுணர்வாக நிதானித்து, பத்திய விதிகளுடன் தக்க அனுபானங்களிற் பிரயோகித்து நோயாளியை கண்ணும் கருத்துமாக நோக்கி சிகிச்சைசெய்து நமதுதேச ஜனங்களின் கொடிய நோய்களைப்

போக்கி நீடூழிகாலமாய் நம் ஜனங்கள் பெரும்பயனை அடைந்து தேசானுஷ்டானத்தில் இருந்துவருகிறதுமான நம்தேசிய வைத்தியத்திற்கு நிகராக அனுபவ புத்திமான்கள் மற்றவைத்தியத்தை விரும்பார்கள்.

3. யார் வைத்தியம் கற்கவேண்டும்.

நம் நாட்டில் கல்வி கற்பதெல்லாம் பணம் சம்பாதிக்க வேண்டியதையுத்தேசித்தேதான் மற்ற எந்தத் தொழிலைப்பார்க்கிலும் வைத்தியதொழிலுக்கு தமிழ்படிப்பும விரிவறிவும் ஈகை இரக்கம், சீவகாருண்ணியம் முதலிய சர்வ குணங்களும் வேண்டும். இத்தியாதி குணம் வாய்ந்தவர்கள் கற்கும் வைத்தியத்திற்கும் இது அமையாதார் கற்கும் வைத்தியத்திற்குமுள்ள வித்தியாசம். எல்லையற்றிருக்குமேயொழிய வேறில்லை.

4. வைத்திய வன்கணாளர்கள்

நம் தேசிய வைத்தியர்களில் அனேகர் அவரவர்களும் சுருதியுக்தி அனுபவ வாயிலாக தேர்ந்தவழியே ஒருவருக்கும் போதிக்க மனமில்லாமல் இறந்து விடுகிறார்கள். அவை அறியாமை என்பதற்கு சிறிதும் ஐயமில்லை நம் வைத்தியத்தை பிறருக்குப் போதிப்பதால் வரவர விர்த்திபடைவதுடன் ஜனங்களும் நோயற்று வாழ்வார்கள். அதனால் வரும் புண்ணியத்தையும் புகழையும் அறியாமல் இறந்து விடுவதினால் பெரும் நரகத்தை அடையும் வன்கணாளர்களெனக் கூறப்படும்

5. வைத்திய ஹீனமும் தற்கால விர்த்தியும்

நம் தேசிய வைத்திய புண்ணிய புருஷர்களாகிய நமக்கெல்லாம் தற்காலம் ஓர் முக்கிய கடமையொன்றுளது. நம் தேசியபாஷை விர்த்திக்குறைவால் நம்வைத்தியமும் குறைந்துகொண்டே வருகிறது. நம் புராதன வைத்தியத்தை விர்த்திசெய்யும்பொருட்டு தேசிய வைத்திய கலாசாலை அவசியம் ஏற்படுத்தவேண்டும். நம் தேசத்தில் நம் ஜனங்களுக்கு சித்தர் நூல்படியே வியாதிகள் வருவதால் சித்தரால் கூறிய தமிழ் வைத்திய மருந்துகளை தவிர வேறு எந்த மருந்துகளும் அனேக வியாதிகளுக்கு தக்க பயன்படாதென்பது அனேகருக்கு தெரிந்த விஷயம் நம் வைத்தியம் ஹீனமடைவதையுத்தேசித்து சில இடங்களில் வைத்திய சங்கம் ஏற்பட்டுளது அவைகளால நன்மையில்லை என்று யான் சொல்லவில்லை.

 T G Krishnasami

வைத்தியர்கள் ஒருவருக்கொருவரே உண்மைபேசாநிலமையில் வைத்திய சங்கத்தில் வைத்தியர்களின் உண்மை வெளியாக காரணமில்லை என்று சொல்லாமலே விளங்குமாகையால் அவைகளைக்கொண்டு நம் வைத்தியம் தற்காலவிர்த்திக்கு ஏதுவில்லை. நம் நாட்டில் தேசீய வைத்திய கலாசாலை ஏற்படுத்தும் வரையில் நம் வைத்தியம் ஹீனமடையாமல் விர்த்திகரு வரும்படியாக ஆன்றோர் வாக்கியப்படி நம் வைத்தியத்தில் பூர்ண பாண்டித்தியம் பெறுவதற்கு சுமார் 12வருஷ படிப்பென கூரியுளர். தற்காலம் அப்படிக்கு வேண்டுவதில்லை. 15-வயதுக்கு குறையாத எவ்வருணத்தாராயினும் வைத்தியத்திற்கு லாயக்கானவர்களாவென நம் அரிவுக்கு எட்டியவரையில் நிதானித்து பூர்ணமனதுடன் நாம் ஒவ்வொருவரும் மெய்யுணர்வாக சத்திய வாக்குடன் நம் அனுபவப்படிக்கு வைத்தியங்களை சுருதியுக்தி அனுபவ வழியே நாம் போதனை செய்தால் நம் மாணவர்கள் சொற்ப வருஷத்தில் நல்ல பாண்டித்தியமடைவார்கள். தற்காலம் இவ்வாறு போதனை செய்வதுதான் நம் வைத்தியம் தற்கால விர்த்திக்கு ஏதுவாகிய இது ஓர் நல்லவழி, நாம் இவ்வாறு நடவாமலும் தேசீய வைத்திய கலாசாலை ஏற்படுத்தாமலும் இதைப்பற்றி தேச நண்பர்கள் கவனியாது அலக்ஷியம் செய்தால் நம் தேசீய வைத்தியம் தலைமாரிவிடும்.

6. வைத்திய இழிவேற்ற பிரார்த்தனை

வைத்திய தொழில் மேலானதென்பது அரிந்தோ அரியாமலோ கடையில் விற்கும் மருந்து கேட்லாக்கைப்போன்ற சில புஸ்தகங்களை வாங்கிப் பார்த்து அரியாமையால் மமதையின் பேரில் எதையாவதுசில மருநதுகளை செய்து வைத்துக்கொண்டு வைத்தியம் அங்காடிக்கூடைபோன்ற நிலமையில் இருந்துகொண்டு நானும் வைத்தியனென்று எவ்வித காரணங்களைக் கொண்டும் வியாதிகளை கையாளப்படாதீர்கள். சீவகாருண்ணியமின்றி இத்தகைய காரியத்தை செய்தாலும் வைத்தியத்தில் எவ்வித பாண்டித்தியமும் வாராது, அதனால் எவ்வித பலனும் நன்மையும் வாராது. கடவுளின சபமதமாகாது மீளா நரகத்துக்காளாகவேண்டும். வைத்தியம் 12வருஷ படிப்பென சித்தரால் கூறப்படுகிறது. வைத்தியம கடலைப்பொலுள்ளது. நான் பூரண பாண்டித்தியனென்று சொல்லவில்லை. ஒருவரையும் தூஷிக்கவேண்டுமென்கிற எண்ணம் எனக்கில்லை. யாவரும் என் சகோதரர்களேயொழிய வேறில்லை. அடியில் வருமாறு நான் வைத்தியம்கற்ற நிலமையை பார்க்க விளங்கும்

Yours Faithfully.

இதில்கண்ட விலாசமுள்ள ஊரில் வைசிய வகுப்பில் வாணிப ஜாதியில் 4—8—1880 ஹூ த்தில் வைத்தியம் செய்யும் குடும் பத்தில் பிறந்து பள்ளிமுடிந்து 17-வயதுமுதல் வைத்திய சம் பந்தமான விஷயத்தில் விடாமுயற்சியாய் நான் வைத்தியம் கற்ற கதையை சுருக்கி 1913ஹூ த்தில் என்னால் இயற்றிய சஞ்சிகையில் எழுதியதை பார்க்க விளங்கும். அதன்பின் என் வைத்திய சம்பந்தமாயுள்ள மணிமந்திர அவுஷதமென்னும் சோதிட மந்திர வைத்திய சம்பந்தமான சரிதையை எழுத விரியும். ஆகையால் என் சகோதரர்கள் வைத்தியம் கற்றுக் கொள்ள விரும்புவோர்கள் இதன் 7, 8, பாராவில் சொல் லியபடி தற்காலம் வைத்தியம் கற்றுக்கொள்ளும்படி நன்றி பாராட்டி நமஸ்கரித்து கூறுவதை அங்கீகாரம்செய்து யாவ ரும் அனுஷ்டிக்கும்படி எமது பிரார்த்தனை.

7. தற்காலம் யாரிடம்—எப்படி வைத்தியம் கற்பது

சித்தர் நூல் ஆராய்ச்சியுடன் அறிவுடையவராகவும் பொ றுமை இல்லாதவராகவும் போதிக்க மனமுடையவராகவும் சர்வவியாதி, பெயர், குணம், ஔஷதவகை, சிகிச்சை, விதி முதலிய எல்லா விஷயத்திலும் தேர்ந்து நீண்ட அனுபவ வைத்தியரைத்தேடி அவரிடம் மாணவனாய் அடைந்து வைத் தியங்களை கற்றுக்கொள்வது நலம் இவ்வாருடைய வைத்தி யர்கள் அவரவர்கள் சவுகரியப்படி யாவருக்கும் கிடைக்கமாட் டார்கள் ஆகையால் தங்கள் தங்கள் சவுகரியப்படி கிடைக்கும் ஒவ்வொரு வைத்தியர்களிடத்திலும் மாணவனாய் அடைந்து தம் மனதிற்கு வைத்தியம் தெளிவுரும்வரையில் சுருதி யுக்தி அனுபவவாயிலாக தெரிந்துகொண்டால் பலதுளி பெருவெள் ளம்போல் தற்காலம் இவ்வழியால் பூர்ணபாண்டித்தியம பெற லாம் வைத்தியர்களிடம் மாணவனாக அடைந்துவிட்டால தம் சிஷனுக்கு இழிவுவராவண்ணம் உண்மையை போதிப்பது அவர்களின் கடமையாகிவிடுகிறதல்லவா. வேறு எந்தவழியி லும் அவர்கள் உண்மை வெளிப்பட காரணமில்லை. அனுஷ் டான குறைவால் மாணவனாய் அடைய வெட்கப்பட்டவர்கள் நற்பயனை அடையமாட்டார்களென்பது திண்ணம்.

8. மாணவன் பூர்த்தியும் கற்கவேண்டிய பாகமும்

வைத்தியம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயமாக விரித் துரைக்க வெகுவாய் விரியுமாதலால் அதன் முக்கிய பாகங் களைமட்டும் கூறுவோமாக. சீர உற்பவம், சப்ததாது, பஞ்

மருந்து
குணங்க
பிக்கை வ
தபால் எழு
கான புஸ்தக
பெயர் கொடுத்து
யாலும்கொடுத்து
யமாக வெளியிட்டு
பதை நாம் நன்ருய் அறி

அவு
அமை
களுடன்
அனேகர்
ஐயமில்லை.
இதன் விஷயம்
லாமலேவிளங்கும்.

வைத்தியம் செய்
பாக்குமென்பதற்கிணங்க

குடலேற்றம் தெரியாமல் கோடிபணம் செலவழித்தாரெனும் பழமொழிக்கிணங்கி மோசம்போகாமல் உங்களுக்கேற்பட்ட வியாதிபெயர் விஷயங்களை தாங்கள் தெரிந்துகொண்டால் சில வியாதிகளை தாங்களேனும் மற்ற வியாதிகளை வைத்தியர்களை அனுசரித்து கிரமமாய் சரீர கெடுதலன்றி சுலபமாய் உங்கள் வியாதிகளை நிவர்த்தித்துக்கொள்ள இதுவே தற்கால நிலமைக்கு முக்கிய் காரணமாகும். ஆகையால் எத்தேசவாசிகளும் அவசியம் அடியில்கண்ட விலாசத்திற்கு உங்கள சரீரத்தில் ஏற்பட்ட வியாதியின் கெடுதல் விபரங்களை நேரிலேனும் கடிதமூலமேனும் எழுதி உங்கள் வயதையும் சரீர கஷ்டரோக முன்பின் தொடர்புடன் காலஅளவையும் மறைவின்றி எழுதி அனுப்புவதுடன் மணியார்டர் செலவின்றி 4 அணு ஸ்டாம்புடன் அனுப்பினல் உங்கள் வியாதி விஷயமாக தேடி எடுத்து வியாதிபெயர்களையும் சிகிச்சாகிரமவிதிகளையும்எழுதி தங்கள் விலாசத்திற்கு அனுப்புகிறோம். அவைகளைக்கொண்டு எளிதில உங்கள் வியாதிநீங்கி தாம் அடையும் நன்மையைப் பற்றி உலகில் ஆன்றோர் சாஸ்திரம் பிரசித்தப்புகழ்பெருமாறு என் சிறுகைமாருலகிற் தளிற்தோங்கி உலகிற்நற்பயனை அடையுப்வண்ணம் இவற்றை குறைந்த சார்ஜாக வெளியிட்டுனம். ஆன்றோர் அனுஷ்டானப்படி எமது முக்தொழிலெனும் வைத்தியம் மணிமந்திர ஔஷதமே. அதாவது மணியெனும் காலத்தை அரிவிக்கும் சோதிட பரிகாரத்துடன் மந்திரமெனும் எந்திராக்ஷா ஜெபத்தால் ஒருமித்து திடம்பெற்ற மனதை ஔஷதமெனும் பானங்களிற் புகட்டி நோயொழியும்படி பிரயோகம் செய்வதே எமதனுஷ்டான நிலையாம். அனேக மருந்துகள் நற்பயனை தரக்கூடியதாயிருந்தாலும் எமது அபிப்பிராயம் இதன் 8, 9 பாரவிற் சொல்லியபடி கேட்லாக்கு மூலமாக வெளிவரும் மருந்துகள் அனேக காரணங்களால் வியாதியஸ்தனுக்கு பயன்பட ஞாயமில்லையென்று விளங்கும். ஆதலால் யான் வியாதியின் பூராநிலமையும் நேரிலோ லெட்டர் மூலமாகவோ தெரிந்து ஔஷதங்களை அனுப்பக்கூடிய வியாதிக்குமட்டும் அனுப்பப்படும். அனுப்பக்கூடாத வியாதிகளுக்கு வியாதியஸ்தனை நேரில்பார்த்துதான் ஔஷதம் கொடுக்கப்படும். உலகில் ஔஷதங்கள் துரைகொடி தொந்தம் கோடியானதால் வைத்திய சகோதரர்களுக்குமட்டும் யான் விஷயதானம் செய்வேனுகவும். எந்த வியாதிகளுக்கு எவ்வகை மருந்துகள் விருப்பமோ அவைகளை அடியிற்கண்ட விலாசத்திற்கு விபரமாயெழுதி ஒரு அணு ஸ்டாம்புடன் அனுப்பினல்

என்னிடமிருக்கும் அம்மருந்தின் முறைகளை சுருதியுக்தி அனுபவ வாயிலாகயுள்ளதை அட்டவணைப்படியோ செய்யுட்படியோ எழுதி அனுப்பிக்கப்படும். இது விஷயமாக கற்றுக்கொள்ள அபேக்ஷையாளர்கள் என்னால் 1913ல் இயற்றி வெளியாகிய சஞ்சிகைப்படி மாணாக்கனாய்க் கேட்டுக்கொள்பவருக்குமட்டும் சுருதி யுக்தி அனுபவமுள்ள வைத்திய மந்திர சோதிட முதலியவைகளை என் புல்லரிவுக் கெட்டியவரையில் கிரமமாய் யாதொரு பிரதிப்பிரயோஜனமின்றி போதிக்கப்படும். ஷை சஞ்சிகை வேண்டுவோர் ஒருஅணா ஸ்டாம்பு அனுப்பினால் இனாமாக அனுப்பப்படும். ஏழைகளுக்கு தர்ம வைத்தியம் செய்யப்படும்.

முத்தொழில் வைத்தியம்,

அ. சீனிவாச செட்டியார்,

ஜேம்பகமல்லி

(திருநாகேஸவரம் போஸ்டு)

ஆரியன் பிரஸ், கும்பகோணம்.

ஓம்.

குற்ற நிவாரணம்.

கவி-நீதிசாரம்.

வேசியரும் நாயும் விதிநூல் வைத்தியரும்
பூசாருங் கோழிகளும் பொன்னனையீர்—பேசிலொரு
காரணந்தானன்றியே கண்டவுடனே பகையாங்
காரணந்தா னப்பிறப்பே காண்.

என்று இவ்வாறு பாடியது நம் அறிவீனத்தாலல்லோ நாயுடன் நம்மையும் சேர்த்து செய்யுள் பாடப்பட்டன சித்தர்களுக்கு கயவகசட பொருமை எதுவுமிருந்ததாகத் தெரியவில்லை. வைத்தியங்களை பிறருக்குப் போதிக்காமல் இருந்ததாகவும் தெரியவில்லை. ஆகையால் இனி நாம் நமது குற்றங்களை நட் ஜென்மத்திற் கிட்டாதூரத்தில் எரிந்துவிட்டு சித்தர் வழியே நாம் வைத்தியங்களை விர்த்திசெய்காலொழிய நாம் நம் குலப்புத்திரனைகமாட்டோமென்பதாக:— (நலத்தின்கணின்மை தோன்றி னவனைக் குலத்தின் கணையப்படும்) என திருக்குறளும் கூறுகின்றது.

கவி.

சொல்லாமலே பெரியர் சொல்லிச்சிறியர் செய்வர்
சொல்லியும் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமைநாடிற்
பலாமாவை பாதிரியைப் பார்.

அருளின றமுரைக்கும் மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொளவர் புலவர்—பொருளல்லா
வேழைபதனை மிகழ்ந்துரைக்கும் பார்கூழை
மூழைசுவை புணராதாங்.

என நாலடியாரில் பாடியதுபோற் சிலரும் அறிவீனமாய் அருளறம் சுவையறியாது கற்றவற்றை வருத்த விதைபோலாக்காமல் உலகநன்றியில் விர்த்திசெய்யும் பொருட்டாக கடவுள் அருள் செய்வாராகவும். தேசநன்றியிற் சித்தமுள நண்பர்கள் இப்புத்தகத்தை பாராதிருக்கும் ஜனங்களுக்கு இதன் விஷயம் அறிவிப்பாராகவும். இதன் விஷயமாக பின்னால் விரிவாக வெளிவரும்:—

14—3—1921. மூ அ. சீ.